செ.வெ.எண்: 546 நாள்: 26.09.2021

**புதுக்கோட்டை நகராட்சியில்**
**மூன்றாவது மாபெரும் கோவிட் -19 தடுப்பூசி முகாம் நடைபெறும் இடங்களை**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள்**
**நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

---

புதுக்கோட்டை நகராட்சியில் நடைபெற்று வரும் மூன்றாவது மாபெரும் கோவிட் -19 தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.09.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோவிட் நோய் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக தமிழக அரசு உத்தரவிற்கிணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்றையதினம் 577 இடங்களில் மூன்றாவது மாபெரும் கோவிட் -19 தடுப்பூசி முகாம்கள் நடைபெற்று வருகிறது.

புதுக்கோட்டை நகராட்சி, ராஜகோபாலபுரம் நகராட்சித் தொடக்கப்பள்ளி, புதுக்கோட்டை நகர்மன்றக் கட்டடம் ஆகிய இடங்களில் கோவிட் -19 தடுப்பூசி முகாம்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் தடுப்பூசி செலுத்தியவர்களின் எண்ணிக்கை, தடுப்பூசி இருப்பு, பொதுமக்கள் வருகை, முகாம்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் பொதுமக்களை கோவிட் நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கும் மிகப் பெரிய ஆயுதம் கோவிட் தடுப்பூசி ஆகும். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்றையதினம் நடைபெறும் கோவிட் தடுப்பூசி முகாமில் இதுவரை கோவிட் தடுப்பூசி செலுத்தாதவர்கள் மற்றும் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்த வேண்டியவர்கள் தவறாமல் கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொண்டு கொரோனா தொற்றிலிருந்து

தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், புதுக்கோட்டை நகராட்சி, காந்தி பூங்காவினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பூங்காவினை சீரமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வது குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது நகராட்சி ஆணையர் நாகராஜன், வட்டாட்சியர் செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**